செ.வெ.எண்: 785

நாள்: 26/12/2011

# செய்தி வெளியீடு

## இந்திய நாட்டிய விழா, மாமல்லபுரம் – துவக்க விழா 27–12–2011

உலக யுனெஸ்கோ அமைப்பால் அறிவிக்கப்பட்ட உலக பாரம்பரிய சின்னங்களின் வரிசையில் தமிழகத்தில் உள்ள மாமல்லபுரத்தில் 1992–ஆம் ஆண்டு **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின் ஆணையின்படி நாட்டிய விழா **முதன் முதலாக தொடங்கப்பட்டு**, ஆண்டுதோறும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இந்நாட்டிய விழா ஆண்டுதோறும் டிசம்பர் மாதம் இறுதி வாரத்தில் தொடங்கப்பட்டு ஜனவரி மாதம் இறுதி வரை நடைபெற்று வருகிறது. இந்த நாட்டிய விழாவினை கண்டுகளிக்க உலகின் பல்வேறு இடங்களிலிருந்து வருகின்ற கலை ரசிகர்களின் எண்ணிக்கை (உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள்) ஆண்டுக்காண்டு அதிகரித்து வருகிறது. பல்வேறு வகையான கலைநிகழ்ச்சிகள் இடைவெளியின்றி ஒரு மாத காலம் நடத்தப்பெறுவதால் வெளிநாட்டுப் பயணிகளிடம் அதிக வரவேற்பையும், எதிர்பார்ப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

காஞ்சிபுரம் மாவட்டம், மாமல்லபுரத்தில் 31 நாட்கள் நடைபெறும் இந்திய நாட்டிய விழா 27–12–2011 அன்று மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் திருமதி. எஸ். கோகுல இந்திரா அவர்களின் தலைமையில், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் திரு. டி. கே. எம். சின்னையா அவர்களின் முன்னிலையில், மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள், இளைஞர் நலத்துறை, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்

திரு. சி. வி. சண்முகம் அவர்கள் தொடங்கி வைத்து விழாப் பேருரையாற்ற உள்ளார்கள். இவ்விழாவில் நாடாளுமன்ற உறுப்பினர்களும், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகளும் பங்கேற்க உள்ளனர்.

இந்த ஆண்டின் நாட்டிய விழாவில் தொடக்க நிகழ்ச்சியாக ஸ்ரீ லெட்சுமி ராமசாமி அவர்களின் தலைமையில் ஸ்ரீ முத்ராலயா நாட்டியக் குழுவின் பரத நாட்டிய நடன நிகழ்ச்சியும், தொடர்ந்து தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத் தலைவர் ‘தேனிசைத் தென்றல்’ திரு. தேவா அவர்களின் ‘தமிழ்நாடு கலாச்சாரம்’ என்ற தலைப்பில் மெல்லிசை நிகழ்ச்சியும் நடைபெறும்.

**இவ்வாண்டு முதல் நாட்டிய விழாவினை அனைவரும் கண்டு களிப்பதற்கு வசதியாக நுழைவுக் கட்டணம் கிடையாது.**

**வெளியீடு, இயக்குநர்
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9**